# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2021

ஆண்டு: 10 திகதி: 12.06.2021

நேரம்: 2½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி புவனேஸ்வரி புருஷோத்தமர்

மாணவர் பெயர்: ______________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 25 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 10 | |
| வினா 7 | 15 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 25 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**கீழ்வரும் உரைப்பகுதியை வாசித்தபின் வினாக்களுக்கு விடை எழுதுக.**

கவிஞர், மேடைப்பேச்சாளர், எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர் எனப் பன்முகத்திறன் கொண்டு ''தமிழ்த் தென்றல்'' எனப் போற்றப்பட்டவர் திரு.வி.கல்யாணசுந்தரம் அவர்களாவர்.

இவர் காஞ்சிபுரம் மாவட்டத்தில் துள்ளம் என்ற சிற்றூரில் 1883 ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையிடமே ஆரம்பக்கல்வியை திரு.வி.க. தொடங்கினார். சென்னை ராயப்பேட்டையில் தங்கி ஆரியன் தொடக்கப் பள்ளியிலும், பின்னர் வெஸ்லிப் பள்ளியிலும் கல்வி பயின்றார். வெஸ்லிப் பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம் மேலைப்புலோலி நா.கதிரைவேற்பிள்ளையிடம் தமிழ் கற்றார். அவரிடம் யாப்பு இலக்கணம், புராணங்கள் ஆகியவற்றைச் சிறப்பாகப் படித்தறிந்தார்.

''எனக்குக் கல்விக்கண் திறந்து வைத்தவர் யாழ்ப்பாணம் மேலைப்புலோலி சதாவதானம் நா.கதிரைவேற்பிள்ளை'' என்றும் ''ஆங்கிலத்தில் பித்துக் கொண்டு திரிந்த எனக்குத் தமிழில் வேட்கையை எழுப்பியவர் அவரேயாவர்'' என்றும் தனது வாழ்க்கைக் குறிப்பில் திரு.வி.க. நெகிழ்ந்து கூறியுள்ளார்.

மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியாரிடம் வடமொழியையும் சைவசமய நூல்களையும், பாம்பன் சுவாமிகளிடம் உபநிடதங்களையும், அப்துல் கரீமிடம் திருக்குர்ஆனையும் கற்றார். நீதிபதி சதாசிவராவ் தொடர்பால் சிறந்த ஆங்கில அறிவையும் பெற்றார்.

திரு.வி.க. முதலில் கணக்காளராக வேலையில் அமர்ந்தார். விடுதலை இயக்க ஈடுபாட்டால் அந்த வேலையை விட்டு நீங்கித் தமிழாசிரியராகப் பணியாற்றினார். தேசபக்தன் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து, தனது எழுச்சிமிக்க எழுத்துக்களால் ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்கள் பொங்கி எழ உணர்வூட்டினார். அந்நியருக்கெதிராக மேடைகளில் ஆவேசமாக உரை பல நிகழ்த்தினார்.

சென்னை மகாசனசங்கக் கூட்டத்தில் ''இனி எங்கும் எவரும் தமிழிலேயே பேசவேண்டும்'' என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். சென்னையில் 1918 இல் முதன்முதலாகத் தொழிற்சங்கம் உருவானதில் திரு.வி.க. வின் பங்கு மகத்தானது. போலீசார் சங்கம், அச்சகத் தொழிலாளர் சங்கம் உருவாகவும் உதவினார். 1920 இல் நவசக்தி என்ற வார இதழைத் தொடங்கித் தொடர்ந்து 20 ஆண்டுகள் நடாத்தித் தேசபக்தியை வளர்த்தெடுத்தார்.

புதிய உரைநடையின் தந்தை என்றும், மேடைப் பேச்சின் தந்தை என்றும் போற்றப்பட்டார். தமிழ்த் தென்றல், பேச்சுப்புயல், எழுத்து எரிமலை, செய்தித்தாள் சிற்பி என்றும் பாராட்டப்பெற்றார். ''தமிழ்நாட்டுக் காந்தியாகவும், தமிழுக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கும் தந்தையாகவும், தொழிலாளர்களுக்குத் தாயாகவும் விளங்கியவர்'' என்று எழுத்தாளர் கல்கி திரு.வி.க. வைப் பாராட்டியுள்ளார்.

திரு.வி.க. அவர்கள் எமக்குத் தந்த நூல்கள் ஏராளம். ''யாழ்ப்பாணம் தந்த சிவஞானதீபம் நா.கதிரைவேற்பிள்ளை சரிதம்'' ''மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்'' என்று பல வாழ்க்கை வரலாற்று நூல்களையும் ''இந்தியாவும் விடுதலையும்'' ''தமிழ் நாட்டுச் செல்வம்'' என்று பல அரசியல் நூல்களையும் ''முருகன் அல்லது அழகு'' ''ஆலமும் அமுதமும்'' ''சைவசமய சாரம்'' ''பரம்பொருள் அல்லது வாழ்க்கைவழி'' ''தமிழ் நூல்களில் பௌத்தம்'' என்று பல சமய நூல்களையும் ''இருளில் ஒளி''

“இருமையும் ஒருமையும்” என்று பல பாடல் நூல்களையும், “இலங்கைச் செலவு” என்று பயண இலக்கிய நூலையும் பல பொதுவுடமைக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் தமது எழுபதாவது வயதில் 1953 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரை நினைவு கூர்ந்து தமிழ் வளர்ப்போம்.

1. தனது ஆசிரியரைப்பற்றி திரு.வி.க. அவர்கள் என்ன கூறியுள்ளார்? (2 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. திரு.வி.க. எப்படியெல்லாம் போற்றப்படுகிறார்? (3 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

3. எழுத்தாளர் கல்கி அவர்கள் திரு.வி.க. வை எப்படிப் பாராட்டியுள்ளார்? (2 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

4. பின்வருவோரிடமிருந்து திரு.வி.க. கற்றவை எவை? (5 புள்ளி)

| | |
|---|---|
| நா.கதிரைவேற்பிள்ளை | |
| தணிகாசல முதலியார் | |
| பாம்பன் சுவாமிகள் | |
| அப்துல் கரீம் | |
| சதாசிவராவ் | |

5. திரு.வி.க. அவர்கள் இருபதாண்டுகளாக நடாத்திய வார இதழ் எது? (1 புள்ளி)

_______________________________________________

6. திரு.வி.க. அவர்களின் உதவியால் உருவான சங்கங்கள் எவை? (3 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

7. அட்டவணையை நிரப்புக. திரு.வி.க. எமக்குத் தந்துள்ள நூல்கள். (5 புள்ளி)

| | |
|---|---|
| வாழ்க்கை வரலாற்று நூல்கள் | |
| அரசியல் நூல்கள் | |
| சமய நூல்கள் | |
| பாடல் நூல்கள் | |
| பயண நூல்கள் | |

8. தமிழ்த்தென்றல் திரு.வி.க. வின் பணிகளும் தமிழும் தமிழ்ச் சமூகமும் பற்றி உமது மனதில் தோன்றும் கருத்துக்கள், எண்ணங்கள் ஆகியவற்றை உமது சொந்த நடையில் எழுதுக. (4 புள்ளி)

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**இடைவெளி நிரப்பல்**

கீழேயுள்ள ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

மருத்துவப் பட்டப் படிப்புத் தெரிவுக்காக எனது அண்ணா interview ______________________க்குச் செல்கிறார். அதற்காக அவர் பிறிஸ்பேண் போகவேண்டியுள்ளது. நாங்கள் அவரை சிட்னி airport ______________________இல் வழி அனுப்பி வைத்தோம். அண்ணா பிறிஸ்பேண் போய்ச் சேர்ந்ததும் WhatsApp ______________________வழியாக text message ______________________அனுப்பினார். அவரிடம் smartphone ______________________ இருக்கிறது. அதிலே அவர் youtube ______________________ஐ பயன்படுத்திப் படங்கள், விளையாட்டுகள் பார்ப்பார். newspaper ______________________ magazine ______________________வாசிப்பார். skype ______________________இல் நண்பர்களுடனும், உறவினர்களுடனும் கதைப்பார். GPS ______________________ஐ உபயோகித்து மகிழுந்தை ஓட்டுவார்.

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**வாக்கியம் அமைத்தல்**

பின்வரும் சொற்களை வைத்து 7 சொற்களுக்குக் குறையாமல் வாக்கியம் எழுதுக.

1. கம்பர் : ______________________

______________________

2. தமிழ்மொழி : ______________________

______________________

3. வெள்ளப்பெருக்கு : ______________________

______________________

4. கொரோனாத்தொற்று : ______________________

______________________

5. இரவும் பகலும் : ______________________

______________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**கடிதம் எழுதுதல்**

இலங்கையில் அல்லது இந்தியாவில் வாழ்கின்ற உமது தாத்தா பாட்டி, கொரோனாத் தொற்றுக்கு ஆளாகாமல் பாதுகாப்பாக வாழ அறிவுரை கூறிக் கடிதம் ஒன்று எழுதுக. (80 – 100 சொற்கள்)

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**கட்டுரை எழுதுதல்**

பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து **150** சொற்களில் கட்டுரை எழுதுக.

1. “எமது தாய்மொழி தமிழைக் கற்போம்” என்ற தலைப்பில் உமது தமிழ்ப்பாடசாலையில் நீர் ஆற்ற இருக்கும் பேச்சை எழுதுக.
   (தமிழின் பெருமை, சிறப்புகள், தமிழைக் கற்க வேண்டியதன் அவசியம், தமிழ் கற்றலால் அடையக் கூடிய நன்மைகள், எமது கடமை என்பன பற்றி விளக்க வேண்டும்)

2. சோழர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த புலவர்கள், அவர்களின் சிறப்புகள், அவர்கள் படைத்த இலக்கியங்கள், அவை பெற்றுள்ள பெருமைகள் ஆகியவற்றை விளக்கிக் கட்டுரை வரைக.

3. புலம் பெயர்வு வாழ்வு எமக்குத் தந்துள்ள வாழ்க்கையினால் ஏற்பட்டுள்ள அனுகூலங்கள் பிரதிகூலங்களை மதிப்பிட்டுக் கட்டுரை எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 10 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**கேட்டுக்கிரகித்தல்**

| வினாக்கள் | இங்கே குறிப்புகளை எடுக்கவும் |
|---|---|
| 1. யார் யாருக்கிடையே ஏற்பட்ட நட்பு இங்கே குறிக்கப்படுகிறது. (2 புள்ளி) | |
| 2. பிசிராந்தையார் எந்தநாட்டுப் புலவராவார்? (1 புள்ளி) | |
| 3. அவர் வாழ்ந்த காலத்தில்<br>பாண்டி நாட்டை ஆட்சி செய்த மன்னன் யார்? (1 புள்ளி)<br>சோழ நாட்டை ஆட்சி செய்த மன்னன் யார்? (1 புள்ளி) | |
| 4. சோழ மன்னனுடன் மேல் பிசிராந்தையார் எப்படி நட்புக்கொண்டார்? (2 புள்ளி) | |
| 5. இவர்களின் நட்பு ஏன் இன்றும் பேசப்படுகிறது? (3 புள்ளி) | |

| வினா இல | 7 | புள்ளிகள் | 15 | பக்கம் | 11 |
|---|---|---|---|---|---|

**கேட்டுக்கிரகித்தல்**

| வினாக்கள் | இங்கே குறிப்புகளை எடுக்கவும் |
|---|---|
| 1. பாரதிதாசனின் இயற்பெயர் என்ன? (1 புள்ளி)<br>________________ | |
| 2. எதற்காகப் பாரதிதாசன் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார்? (1 புள்ளி)<br>________________<br>________________ | |
| 3. பாரதிதாசன் எந்தெந்தத் துறைகளில் பணியாற்றினார்? (4 புள்ளி)<br>________________<br>________________<br>________________ | |
| 4. பாரதிதாசன் தனக்கு இட்டுக்கொண்ட புனைபெயர்கள் எவை? (2 புள்ளி)<br>________________<br>________________<br>________________ | |
| 5. தனது எண்ணங்களைப் பாரதிதாசன் எந்தெந்த வடிவங்களில் வெளிக்காட்டினார்? (3 புள்ளி)<br>________________<br>________________<br>________________ | |
| 6. பாரதிதாசன் எழுதிய புகழ்பெற்ற வரிகள் இரண்டு எழுதுக. (4 புள்ளி)<br>________________<br>________________<br>________________<br>________________ | |